
பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
....திடன்கொள்ளுங்கள்
நான் உலகத்தை
ஜெயித்தேன்.
என்றார்.
யோ:16:33
செய்தி மலர்
2019
பிப்ரவரி
மலர் : 15
இதழ் : 10



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஜனவரி மாதம் முழுவதும் நம்மை கண்மணி போல வழிநடத்தின தேவன் வரும் பிப்ரவரி மாதத்திலும் நம் கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களாலும் திருப்திபடுத்தி வழி நடத்துவாராக!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார் " உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவா-16:33)

ஆம் பிரியமானவர்களே, இந்த உலகத்தின் உபத்திரவங்கள் எல்லாவற்றையும் அனுபவித்து அவைகளை மேற்கொண்டு ஜெயித்த தேவாதி தேவன் நம்மோடு கூட இருந்து ஜெயத்தை கொடுக்க வல்லவராயிருக்கிறார். ஆகவே உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக. நாமும் ஜெயிக்கிறவர்களாகவே இந்த உலகத்தில் வாழ்வோம். காரணம் உலகத்தை ஜெயித்த இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று (மத்-28:20)

## 1. கடந்த கால உபத்திரவங்கள்...........

கடந்த வருட கசப்பான சம்பவங்களை நினைத்து அநேக நேரங்களிலே கலங்குகிறோம். என்னால் இந்த துன்பத்தை மறக்கமுடியவில்லையே என அங்காலாய்க்கிறோம். பிரியமானவர்களே கடந்த கால உபத்திரவங்களை எண்ணிப் பார்ப்பதைவிட அந்த உபத்திரவங்களிலே தேவன் நம்மோடிருந்து நம்மை வழி நடத்தின அற்புதங்களை நினைத்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். தேவ மனிதனாகிய மோசே வனாந்திரத்திலே தேவன் எப்படியெல்லாம் அற்புதங்களை செய்து வழி நடத்தினார் என்பதை நினைத்துப் பார்த்தான். எத்தனையோ உபத்திரவங்களை வனாந்திர வாழ்க்கையிலே அனுபவித்து இருந்தாலும் தேவன் பகலிலே மேகஸ்தம்பமாகவும், இரவிலே அக்கினி ஜீவாலையாகவும் இருந்து வழிநடத்தினார் என்பதை நினைத்து பார்த்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான்.

90-வது சங்கீதத்திலே அவன் சொல்கிறான் "ஆண்டவரே உமது பார்வைக்கு ஆயிரம வருஷம் நேற்றுக் கழிந்த நாள் போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது. ஆகவே நாங்கள் ஞான இருதயம் உள்ளவர்களாகும் படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்கு போதித்தருளும். தேவரீர் எங்களை சிறுமை படுத்தின நாட்களுக்கும் நாங்கள் துன்பத்தை கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்" என்று. அதே விசுவாசத்தோடு நாமும் ஆண்டவர் நிச்சயமாக நம்மை கரம் பிடித்து நடத்துவார் கடந்த காலம் முழுவதும் நம்மோடு கூட இருந்து வழி நடத்தியவர் இனிமேலும் நடத்துவார் என்று மோசேயேப் போலவே விசுவாசிப்போம். காரணம் வேதம் கூறுகிறது. நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவை விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? என்று (1-யோவா-4:4,5)

பக்தன் ஒருவன் பாடுகிறான் " எண்ணி எண்ணி துதி செய்வாய் எண்ணிலடங்காத கிருபைகளுக்காக இந்த நாள் வரை தம் கரத்தால் என்னை தாங்கின நாமமே" என்று. மோசே மேலும் கூறுகிறார் "ஒரு மனிதன் தன் பிள்ளையை சுமந்து கொண்டு போவது போல நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும் நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை சுமந்து கொன்டு வந்ததை கண் டீர்களே" என்று (உபா-1:31) தாவீது சொல்கிறார் "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதினால் உமது பிரமாணங்களை கற்றுக்கொள்கிறேன்" என்று (சங்கீ-119:71)

இப்படி கடந்த காலத்திலே நமது உபத்திரவத்தின் பாதையில் ஆண்டவர் செய்த அதிசயங்களையும் வழி நடத்துதலையும் நினைவு கூர்ந்து அவைகளை தியானத்து அதன் மூலம் நாம் கற்றுக்கொண்ட வேத பிரமாணங்களை தியானிக்கிறபொழுது நாம் கடந்த காலத்தை ஜெயித்தவர்களாக காணப்படுவோம். அல்லேலுயா!

## 1. நிகழ்கால உபத்திரவங்கள் ..

கர்த்தருக்காக தன்னை அர்பணித்து சுவிசேஷம் ஊழியம் செய்த பவுல் எவ்வளவோ உபத்திரங்கள் வழியாய் கடந்து சென்றார். அவர் சொன்னார் "இப்படிப்பட்ட உபத்திரவங்களை சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே ஏனெனில் நான் எந்த நிலைமையில் இருந்தாலும் மனம் ரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொண்டேன் தாழ்ந்திருக்கவும் எனக்கு தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்கு தெரியும், எவ்விடத்திலும், எல்லாவற்றிலும், திருப்தியாய் இருக்கவும், பட்டினியாய் இருக்கவும், பரிபூரணமடையவும், குறைவு படவும் போதிக்கப்பட்டேன். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு. கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ

நாச மோசமோ, பட்டயமோ இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்கள் ஆனாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறு எந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மை பிரிக்க மாட்டாது என்று நிச்சயித்திருக்கிறேன்" என்று (பிலிப்-4:11-13), (1-கொரி-15:57), (ரோம-8:36-39)

பக்தன் ஒருவன் அழகாக பாடுகிறார் "காடானாலும் மேடானாலும் பறந்து சென்றிடுவோம். பாடானாலும் பாடி செல்வோம் பரவசமுடனே இயேசு பரன்தான் நம்முடனே" என்று. ஆகவே பிரியமாணவர்களே ஆண்டவராகிய இயேசு நமக்கு துணை நிற்கிறார் என்ற விசுவாசத்தோடு நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியையும் நம்பிக்கையோடு எதிர்கொள்வோம். பாடுகளிலும் பாடிச் செல்லும் அனுபவத்தை ஆண்டவர் நமக்கு தருவார். காரணம் வனாந்திரத்திலே கர்த்தர் வழியை உண்டு பண்ணுவார். அவாந்திர வெளியிலே அவர் ஆறுகளை தோற்றுவிப்பார். கற்பாறையிலே அவர் நீரூற்றுகளை வர வைப்பார். நாம் தோற்பதற்கு பிறந்தவர்களல்ல, நாம் ஜெயிக்க பிறந்தவர்கள். உங்களுக்குள்ளும் எனக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கும் தேவ ஆவியானவர் இந்த உலகத்தை ஜெயித்தவர். அல்லேலூயா!

## 2. எதிர்கால உபத்திரவங்கள் .

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை சொல்ல நமக்கு கட்டளை கொடுத்து அதை நிறைவேற்றி முடிக்க பரிசுத்த ஆவியையும் நமக்கு துணையான கொடுத்திருக்கிறார். (மத்-28:18-20) பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசேலமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள். (அப்-1:8) வானம் எனக்கு சிங்காசனமும் பூமி எனக்கு பாதபடியுமாய் இருக்கிறது (அப்-7:49) வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத்-28:18)

ஆம் பிரியமானவர்களே, நாம் ஆண்டவருக்கு சாட்சிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த உலகத்தில் நாம் வாழ்கிற நோக்கமே ஆண்டவர் நாமம் மகிமைக்காக வாழ்ந்து சாட்சியின் ஜீவியத்தை ஜீவித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையின் மூலம் மற்றவர்களுக்கு பிரதிபலித்து அவர்களையும் கிறிஸ்துவின் மந்தைக்குள்ளாக அழைத்து வரவேண்டும் என்பதே ஆகவே எதிர்காலத்தை நம்பிக்கையோடுகூட நாம் எதிர்கொள்வோம். ஜெயம் கொடுக்கிற இயேசு கிறிஸ்து வழி துணையாய் நம்மோடு கூட எப்பொழுதும் வருவார்.

தேவைப்படுகின்றபொழுது எப்பொழுது வேண்டுமானாலும் நாம் அவரை நோக்கி அப்பா பிதாவே என்று கூப்பிடலாம். உடனே அவர் நமக்கு செவி கொடுத்து நம்மை ஆற்றி தேற்றி நம்மை வல்லமையின் கருவியாக எடுத்து பயன்படுத்துவார்.

நாளைக்காக கவலைப்படாதிருங்கள், நாளைய தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும். முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும் (மத்-6:33,34) அவருடைய சாட்சிகளாகிய நீங்களும் நானும் ஆண்டவர் நம்மோடு கூட இருக்கிறார் என்ற உணர்வோடு நமக்கு நியமித்திருக்கிற தேவ சித்தத்தை நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் எதிர்கொள்ள தேவ ஆவியானவர் தாமே நமக்கு பெலன் கொடுத்து ஆண்டவருக்கு சாட்சியாக வாழ வைப்பார். கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணபங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும். (பிலி-4:4-7) சாதாரண விசுவாசிகளாகிய நமக்கும் ஆண்டவர் வரங்களை கொடுத்து பிசாசுகளை துரத்த வைப்பார், நவமான பாஷைகளை பேச வைப்பார், சர்ப்பங்களை எடுக்க வைப்பார், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் சேதப்படுத்தாமல் பாதுகாப்பார். வியாதியஸ்தர் மேல் கைகளை வைக்க அவர்களை சொஸ்தப்படுத்துவார். (மாற்கு-16:15-18) ஆகவே பிரியமானவர்களே விசுவாசத்தோடு எதிர்கால உபத்திரவங்களை வென்று இயேசுவின் நாமத்தினாலே ஜெயம் எடுப்போம்.

பக்தன் பாடுகிறார் ஜெயகிறிஸ்து முன்னே செல்கிறார் ஜெயமாக நடத்தி செல்வார் ஜெயகீதங்கள் நாம் பாடியே ஜெயக்கொடியையே ஏற்றிடுவோம் துதி அல்லேலூயா அவர் நாமத்திற்கே என்று.

கர்த்தரின் பணியில்,

அன்பு சகோதரன்

**சகோ. ஸ்டாலின்**

# ஆளுகிறவர்களாக இருங்கள்

நம்மை ஆளுகிற ராஜாக்கள் 5ல் 3 ராஜாக்களை பற்றி சென்ற மாத இதழில் நாம் தியானித்தோம் இந்த மாதம் மேலும் இரண்டு ராஜாக்களை குறித்தும் மற்றும் 2 காரியங்களை குறித்து தியானிக்க போகிறோம். நம்முடைய வாழ்க்கைக்கு பிரயோஜனமான ஒரு தியானம் –தியானித்து பயன் பெற வேண்டுகிறோம்.

## வாய் (நாவு) நான்காவது ராஜா

அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது!(யாக் 3:5)

ஐம்புலன்களிலேயே மிகவும் ஆபத்தானது நாவுதான், இதை நமது கட்டுபாட்டுக்குள் வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தேவன் இதற்கு பற்களை முதலாது பாதுகாப்பாகவும். உதடுகளை இரண்டாவது பாதுகாப்பாகவும் கொடுத்து, நாவின் சத்தம் கேட்கத் தக்கவைகளையும் கேட்கத் தகாதவைகளையும், கட்டுபடுத்தம் வண்ணம், அமைத்திருக்கிறார், உலகில் இன்று விட்டிலும், நாட்டிலும் நடக்கும் அனைத்து சண்டை சச்சரவுகளுக்கும் இந்த நாவே காரணம், இது அநீதி நிறைந்த உலகம் என்று யாக்கோபு கூறுகிறார், சிறிய நெருப்பு காட்டையே கொளுத்திவிடுகிறதை சிந்தித்தால், நாவும் சிறியதென்றால் இது எத்தனை அழிக்கும் தன்மையை கொண்டது என்று அறிந்து கொள்ளலாம்.

ஆகையால்தான் தாவீது என் வாய் மீறாதபடிக்கு தீர்மாணம் பண்ணினேன் என்கிறார்(சங் 17:3) ஆம் நமது நாவின் வார்த்தைகள் இருதயத்தின் உண்மைக்கு ஒத்து இருக்கவேண்டும், என்று ( யோபு 33:3) கூறுகிறார்.

இயேசுகிறிஸ்து தன் வாயை திறந்து பேசினார், ஜனங்கள் மூன்று நாளாகியும் பசி, தாகம் அறியாத வண்ணம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பக்திவிருக்த்தியடைந்தார்கள். கிருபை பொருந்தினவைகளாக அவரது வார்த்தைகள் இருந்தன. அதே போல நாம் பேச பழக வேண்டும், இன்று சவரன் கத்தி போல (சங் 52:4) பட்டயக் குத்துகள் போலவும் பேசி (நீதி 12:18)அநேகரை மடிவித்திருக்கிறார்கள். புருஷர்களின் வார்த்தைகளால் மனமுடைந்து சாவை தேடிய மனைவிகள் ஏராளம்! மனைவிகளுடைய வார்த்தைகளால் கொலைகாரர்களாக மாறிய புருஷர்களும் உண்டு. சமீபத்தில் ஒரு நீதிபதி தன் மனைவியின் வார்த்தைகளால் மனமுடைந்து தூக்கு போட்டுக் கொண்டு மரித்து போனார், நாவை கடக்க தெரியாததால் சிதறுண்ட ஊழிய ஐக்கியங்கள் அநேகம், ஊழியர்களுக்கே இப்படியானால் மற்றவர்களை பற்றி என்ன சொல்ல ?

இயேசு பேசின பொழுது மரித்தவனும் உயிர்த்தெழுந்தான், இயேசு பேசினார், வியாதியஸ்தர்கள் சுகம் பெற்றர்களே!நாம் எப்படி பேசுகிறோம்? நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், குறித்து கனக்கு கொடுக்க வேண்டும், என்று இயேசு சொல்லி இருக்கிறார். மொர்தகாய் தன் ஜனங்களுடைய நம்மையை நாடி, தன்

குலத்தாறுக்கெல்லாம் சமாதனமுண்டாக பேசுகிறவனுமாயிருந்தான்,(எஸ்தர் 10:3) என்று வாசிக்கிறோம். நாமும் அப்படியே பேசுவோமாக, மணவாட்டியின் நாவுகளின் கீழ் தேனும் பாலும் இருக்கிறதாம் (உன் 4:11) நீங்கள் எப்படி? உங்கள் வாய் எப்படி? உங்கள் நாவு எப்படி? உங்கள் வார்த்தைகள் எப்படி? சிந்தியுங்கள்!

குலத்தாறுக்கெல்லாம் சமாதனமுண்டாக பேசுகிறவனுமாயிருந்தான்,(எஸ்தர் 10:3) என்று வாசிக்கிறோம். நாமும் அப்படியே பேசுவோமாக, மணவாட்டியின் நாவுகளின் கீழ் தேனும் பாலும் இருக்கிறதாம் (உன் 4:11) நீங்கள் எப்படி? உங்கள் வாய் எப்படி? உங்கள் நாவு எப்படி? உங்கள் வார்த்தைகள் எப்படி? சிந்தியுங்கள்!

ஒருவன் தன் நாவை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்சித்து தன்னை தேவ பகத்தியுள்ளவன் என்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்.(யாக் 1:26) என வேதம் சொல்லுகிறது. நமது பக்தியின் ஆழம் நமது நாவில்தான் இருக்கிறது. நமது நாவை அடக்கி. நமது ஆவிக்குறிய ஜீவியம், ஜெயம் கொண்ட ஜீவியமாக இருக்க கர்த்தர் உதவி செய்வாராக!

## மூக்கு(சுவாசம்)ஐந்தாவது ராஜா

அவர்களை நோக்கி: நீங்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறது என்ன? இந்த ஜனங்கள் எல்லாரும் உங்கள் பொல்லாத நடக்கைகளைச் சொல்லக் கேட்கிறேன். என் குமாரரே, வேண்டாம்; நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல; கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே.( 1 சாமு 2:23,24)

மூக்கு மனிதனுக்கு ஒரு முக்கிய உறுப்பு, இதிலேதான் தேவன் மனிதனுக்குள் ஜீவ வார்த்தயை ஊதினார், மனிதன் ஜீவனுள்ள ஆத்துமாவானான். சுவாசத்தோடு மட்டுமல்ல இது நுகர்ந்து உணரும் தன்னைமயையும் கொண்டது. நல்ல வாசனை, துர்வாசனைகளை அறிந்து கொள்ள மூக்கு பயன்படுகிறது. நல்ல வாசைன என்றால் நீண்ட மூச்சை உள்ளே இழுக்கிறோம், துர்வாசனை என்றால் மூக்கை பிடித்து கொள்கிறோம்,அதை போல நம்மை பற்றிய சாட்சியையும் நாம் உணர்ந்து நம்மை திருத்தி கொண்டு வாழ, நமக்கு உணர்த்துகிற அறிவை நாசியின் மூலம் தேவன் தந்திருக்கிறார்.

மேலே வாசித்த வசனத்தில் ஆசாரியனாகிய ஏலியின் குமாரர்களை பற்றி ஏலி கேள்விபட்ட சாட்சிகளை வாசிக்கிறோம், தேவனுடைய ஆலயத்தில் நடந்து கொள்ள வேண்டிய விதத்தையே அறியாத ஏலியின் குமாரர், எப்படி தேவாலயப் பணிவிடைக்குப் தகுதியானவர்கள்? அவர்களின் பொல்லாத நடக்கையை பற்றி ஜனங்கள் சொல்வதை கேட்ட பின்பும் தங்களை திருத்தி கொள்ள மனமில்லை, அதனால் முடிவு என்ன? யுத்தத்தில் இருவரும் ஒரே நாள் மரித்தார்கள்! கர்த்தரின் பாதுகாப்பு அவர்களுக்கு இல்லை, ஊழியமும் இல்லாமல் போயிற்று(1 சாமு 4:10,11)

இதே சாமுவேலை பற்றி ஜனங்கள் மத்தியிலிருந்து நல் வாசனையை கவனியுங்கள் 9:6ல் இந்த பட்டணத்தில் தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார், அவர் பெரியவர்,அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும், நாம் அங்கே போவோம், அவர் நாம் போக வேண்டிய வழியை நமக்கு தெரிவிப்பார் என்று காணாமறபோன கழுதைகளை தேடி வந்த சவுலின் வேலைகாரன் சொன்னதை கவனியுங்கள்.

சாமுவேலை பற்றி நற்சாட்சி பட்டணத்தில் பரவியது மட்டுமல்ல, சூப் நாட்டடை கடந்து சாலீம் நாட்டை தாண்டி சலீஷா நாட்டிற்கும் அப்பால் போயவிட்டது அவரது வாசனை , அதை பற்றிக் கேள்விபட்டிருந்து சவுலின் வேலைகாரன் ராமா பட்டணம் வந்தவுடன் அதை நிளைவு கூறி சாமுவேலிடம் போவோம் என்று அடைக்கிறான்.

அருமையானவர்களே இந்த சாட்சி நமக்கும் உண்டாயிருக்க வேண்டும். நம்மைபற்றிய வாசைன எந்த அளவிற்கு வெளியே தூரமாய் செல்கிறதோ அந்த அளவுதான் நாம் ஆசீர்வதிக்கபட்டிருக்க முடியும், அதுதான் நமது எல்லை.

ஒரு மாமனார் தன்னுடைய இரண்டு மருமகள்களுக்கு போட்டி வைத்தார், யாருடய சமையலின் வாசைன அதிக தூரம் வீசுகிறதோ அவர்கள் கையில் வீட்டு பொருப்பை( சாவி கொத்தை) ஒப்படைத்துவிடுவதாக முடிவெடுத்தார். அதன்படி உறவினர்கள் யாவரையும் அழைத்தார் . இருவரிடமும் தலா 5000ரூபாய் கொடுத்து முதல் நாள் மூத்த மருமகளையும் இரண்டாவது நாள் இளைய மருமகளையும் சமையல் செய்ய ஏற்பாடு செய்தார். போட்டியை ஏற்று கொண்ட மருமக்கள் இருவரும் தயாரானார்கள்.

முதலாம் நாளின் சமையல் வாசனை அபாரமாய் இருந்தது. அடுத்த தெருவரைக்கும் வீசிற்று. நள பாகம் படித்தவள், சாப்பிட்டவர்களின் கை மணம் வீசியது, உண்ட வாயும் மணம்வீசியது அப்படி ஒரு சமையல். இரண்டாவது நாள் விருந்து மிக எளிமையும் எல்லாரும் ரசித்து, ருசித்து சாப்பிடதக்கதாய், இருந்தது, விருந்து முடிந்ததும் அவரவர் எல்லாரும் வீட்டுக்கு திரும்பினார்கள், மூத்த மருமகளின் சமையல் வாசனை அறிந்த மாமனார் சாவி அவளிடமே செல்லும் என நினைத்தார், அடுத்த நாள் அவருக்கு கிடைத்த கடிதங்களில் மூத்தமருமகளின் சமையல் பிரமாதமாய் இருந்தாலும் அவளது சிடுமூஞ்சிதனமும் கருமித்தனமும் வயிற்றுக்கு சாப்பிட்டதை தவிற அவளை வாழ்த்துவதற்கு விருப்பமற்றவர்காளய் எழுதியிருந்ததோடு இளை மருமகளின் சமையல் சாதாரணமாய் இருந்தாலும் அவள் பரிமாறிய விதமும் அனைவருடைய மனதிலும் பதிந்தது. அவளது உபசரணை அநேகரையும், குடும்பத்தின் ஐக்கியத்தை கட்டி காக்க தகுதியாளவள் என்று கூறும் வண்ணம், பல நூறு மையில் தூரம் சென்ற உறவினர் கடிதத்தில் வெளிபட்டது.

சமையல் திறமை தேவைதான் ஆனால் குடும்பத்தை கட்டுவதற்கும் ஐக்கியத்தை உருவாக்குவதற்கும் குணமே அவசியமானது, அந்த குணம் இளையவளிடம் இருந்ததால் அநேகருடைய தீர்ப்பின்படி இளையவள் கையில் சாவி கொத்தை(பொறுப்பை) ஒப்படைத்தார். மாமனார் மூத்த மருமகள் திறமையின் வாசனை அடுத்த தெருவுக்கும் வீசிற்று, இளைய மருமகளின் திறமையோ ரயில் ஏறி பயணம் சென்றது. நம்முடைய நற்குணம் யாவரும் மெச்சி கொள்வதாக இருக்க வேண்டும்,

யாக்கோபு சிமியோனையும் லேவியையும் பார்த்து, இந்த தேசத்தில் குடியிருக்கிற கானானியரிடத்தில் பெரிசியரிடத்திலும் என் வாசனையை நீங்கள் கெடுத்ததினால் என்னை கலங்கபண்ணீர்களே, (ஆதி 34:30) என்கிறார். நாமும் நமது நற்சாட்சியாகிய வாசனையை நுகர்ந்து பாாத்து நம்மை திருத்தி கொள்வோமாக. நாம் ஜெயம் கொண்ட ஜீவியம் செய்ய அதுவே நமக்கு பெலனாயிருக்கும் அல்லேலூயா!

கழுத்தின் மேல் கால்களை வைத்தார்கள்:–

அவர்களையோசுவாவினிடத்திற்குக்கொண்டுவந்தபோது,யோசுவா இஸ்ரவேல்மனுஷரையெல்லாம்அழைப்பித்து,தன்னோடேகூடவந்த யுத்தமனுஷரின்

அதிபதிகளை நோக்கி: நீங்கள் கிட்டவந்து, உங்கள் கால்களை இந்த ராஜாக்களுடைய கழுத்துகளின்மேல் வையுங்கள் என்றான்; அவர்கள் கிட்டவந்து, தங்கள் கால்களை அவர்கள் கழுத்துகளின்மேல் வைத்தார்கள்.( யோசு 10: 24)

ஆம் 5 ராஜாக்களில் கழுத்துகள் மேலும் கால்களை வைத்து மிதித்தார்கள். இது எதை காட்டுகிறது? அவர்களின் செய்கைகள், அதிகாரம், இவைகளெல்லாம் நமது காலடியில் இருக்க வேண்டும், அதை காட்டுகிறது. ஆம் நாம் நமது ஐம்புலன்களில் செய்கைகளை நமது கட்டுபாட்டில் நமது காலுக்கு கீழே கொண்டுவருவதுதான் ஜெயஜீவியம்.

எபி 2:7ல் மனிதனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டி உம்முடைய கரத்தின் கிரியையின் மேல் அவனை அதிகாரியாக வைத்து சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்படுத்தினீர், .. சகலத்தையும் அவனது பாதங்களுக்கு கீழ்படுத்தினார் என்கிற விஷயத்தில் அவர் அவனுக்கு கீழ்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை என்று எழுதியிருப்பதை பார்க்கிறோம். ஆகவே தேவனுடைய திட்டமும் நோக்கமும் தமது சாயலாக சிருஷிடிக்கபட்ட மனிதன் இந்த உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளையும் கீழ்படுத்தி, ஆள வேண்டும் என்பதே!(ஆதி 1:28) அவரது திருவுள சித்தம். இன்று தங்கள் புலன்களை ஆள முடியாதவர்கள் மற்ற(வர்)வைகளை ஆள முடியாது. ஆகவே கானானின் ராஜாக்களை(5 புலன்களையும்) நமது கால்களுக்கு கீழ்படுத்துகிற கர்த்தரின் கிருபைக்கு கீழ்படிவோமாக. தேவ வல்லமை நம்மை ஆண்டு கொள்வதாக.

ஒரு முறை ஒரு ஊழியர் பிசாசின் பிடியில் தவித்த சகோதரி ஒருவருக்காக ஜெபம் பண்ண போயிருந்தார். இயேசுவின் நாமத்தில் இந்த பெண்ணை விட்டு போ என்று உனக்கு சொல்லுகிறேன் என்றதும், அந்த ஆவி பேச தொடங்கியது. டேய் நீயா என்னை போ என்று விரட்டுகிறாய்? நீ ஆந்திராவிலே பண்ணின சேட்டை தெரியாதா? அந்த பெண்ணை அநாதையாக விட்டுவிட்டு இங்கே வந்து பெரிய பரிசுத்தவானை போல என்னை விரட்டுகிறாயா? என்றது. ஐயகோ ஊழியரின் நிலை எப்படி இருந்திருக்கும் என்று சற்று சிந்தித்து பாருங்கள்! நமது நல்மனசாட்சிக்கு தெரியும் நமது ஜெய ஜீவியம் அந்த ஜெய ஜீவியத்தின் வல்லமை நமது அனுதின ஜீவியத்திலும், ஊழியத்திலும்தெளிவாய் விளங்கும்.

கொன்று,மரங்களிலேதூக்கிபோட்டார்கள்/கெபியில் அடைத்தார்கள்.:-

அதற்குப்பின்பு யோசுவா அவர்களை வெட்டிக் கொன்று, ஐந்து மரங்களிலே தூக்கிப்போட்டான்; சாயங்காலமட்டும் மரங்களில் தொங்கினார்கள்( யோசுவா10:26)

அந்த ஐந்து ராஜாக்களையும் யோசுவா கொன்று போட்டு அவர்களை மரங்களிலே தூக்கிப்போட வைத்து, சகல ஜனங்களுக்கும் செத்து போனதை கானும்படி செய்தான், இதுதான் ஜெய ஜீவியத்தின் தெளிவான அடையாளம், நம்முடைய பரிசுத்தம், தேவனுக்கு தெரியும் என்றோ, என் மனசாட்சிக்கு சரியாய் நடக்கிறேன் என்றோ சொல்லி நம்மை நாம் திருப்த்திபடுத்தி கொள்ள கூடாது (நம்மை நாமே ஏமாற்றி கொள்ள கூடாது) அது சகல ஜனங்களின் பார்வைக்கும் தெரிய வரவேண்டும். அதுவே ஜெய ஜீவியம்! அல்லேலூயா!

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; "

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜியோஃபி ஷம்மா ஏசுரெத்தினம்
செல்வி. ஷாரோன் கிரேஸ் எபிநேசர்
செல்வி. பெனிடா ரையாசிங் டேவிட்பாஸ்கர்
செல்வி. கரன் பெபிட் செல்பின்
செல்வி. ஹெப்சிபா பியூலா தாமஸ்
செல்வி. கிறிஸ்து ராணி ஆசீர்வாதம்

செல்வன். ஜாண் அற்புதராஜ்
செல்வன். பிரவீன் ஐசக்துரை
செல்வன். ரிச்சர்ட் வேதானந்தம்
செல்வன். அருண்பிரகாஷ் அல்போன்ஸ்

சகோதரி. ராணி ராமமூர்த்தி
சகோதரி. கீதா சகாய மேரி வின்ஸன்ட்
சகோதரி. நீலாவதி ஆசீர்வாதம்
சகோதரி. மெர்லின் ஜோன்ஸ்

சகோதரி. ஜாய் ஷெகினாஜாண்போஸ்கோ
சகோதரி. பிரிஸ்சில்லா ஆமோஸ்

சகோ. எபிநேசர்
சகோ. இம்மானுவேல் ஸ்டீபன்
சகோ. வேலு ராமர்
சகோ. டேனியில் குமார்
சகோ. ஜெயசேகர்
சகோ. ஜெயபிரகாஷ்
சகோ. நவீண் குமார்
சகோ. ஜாண்சன்
சகோ. வேதானந்தம்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

திருமதி – திரு. ராபின்ராஜ்(ஹெலன் ஷீஜா)
திருமதி – ஆஸ்டின்
திருமதி – திரு. சங்கர்
திருமதி – திரு– அந்தோணி சாமி
திருமதி – திரு. ராஜவேல்

## 2019 பிப்ரவரி மாத நிகழ்ச்சி நிரல்

### ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/02/2019 | சகோ. தாமஸ் | சகோ. ஜெயசேகர் |
| 10/02/2019 | சகோ. சுகுமார் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 17/02/2019 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. ஜெகநாதன் |
| 24/02/2019 | சகோ. ஜினோ | சகோ. பிரசாத் |

### வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/02/2019 | சகோ. ஐசக்துரை | சகோ. கிறிஸ்டோபர் |
| 08/02/2019 | Pastor. ஜெனிட் சோபிதராஜ் பர்னபாஸ்( தமிழ்நாடு ) | |
| 15/02/2019 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 22/02/2019 | சகோ. ஜெயபிரகாஷ் | சகோ. அற்புதராஜ் |

### முழு இரவு ஜெபம்

14/02/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(நேரம் இரவு 10:00 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை)

### சகோதரிகள் ஐக்கிய கூடுகை

(தேதி இடம் – பின்னர் அறிவிக்கப்படும்– நேரம் 6:30 to 8:30

### 22/02/2019 வாலிப ஐக்கிய கூடுகை

நேரம் 6:30 to 8:30
(இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )

## ஜேம்ஸ் சால்மர் (1841–1901)

இராபெட் மொபட், டேவிட் லிவிங்ஸ்டன், ஜாண் ஜி.பேட்டன், வால்டர் ஸ்காட், இராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சன் போன்ற தேவ மனிதர்கள் உதித்த ஸ்காட்லாண்டு தேசத்தில் ஆகஸ்ட் 4–ஆம் தேதி 1841–ஆம் ஆண்டு ஆர்டிஸ்சா என்ற கிராமத்தில் பிறந்தார் ஜேம்ஸ் சால்மர். அவருடைய தந்தை கல்தச்சர், வேலைக்காக வெளியூர் சென்றவர் வீடு திரும்பவேயில்லை. சிறு வயது முதல் ஜேம்ஸ் சால்மர் ஒழுக்கமுள்ளவராக வளர்ந்தார். இந்த எளிய பக்தியுள்ள, கிறிஸ்தவ பெற்றோருக்கு இன்னும் இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தனர். தனது வீட்டினருகே இருந்த கடலில் விளையாடுவதும், அங்குள்ள மீனவர்களின் நண்பனாகவும் இருந்தார் ஜேம்ஸ் சால்மர்.

பள்ளிக்கு அழைத்துச் சென்ற அவருடைய தாயார் ஆசிரியரைப் பாரத்து ஐயா, என் மகனைக் கண்டிப்பதற்கு நீங்கள் சற்றும் தயங்க வேண்டாம் என்றது ஜேம்ஸின் மனதில் பதிந்திருந்தது. அதை அவர் ஏற்றுக்கொள்ளவும் செய்தார். கிராம வாலிபனாக வாட்ட சாட்டமாக, தைரிய நெஞ்சுடையவராக திகழ்ந்தார். அவருடைய இயற்கை சுபாவமே அவர் ஒரு தலைவர் என்பதை எடுத்தியம்பிற்று. கடலில் அனுபவமுள்ள ஜேம்ஸ் பத்து வயதாயிருக்கும்போது, தனது சக பள்ளி மாணவனைக் கடலின் அலையிலிருந்து காப்பாற்றினார்.

ஓய்வு நாள் பாடசாலையில் ஒருநாள் போதகர் மெக்கின் பிஜி தீவுகளில் பணயாற்றிய ஒரு மிஷனெரியின் கடிதத்தை வாசித்தார் அக்கடிதத்தில் நரமாமிசம் உண்கிற பழங்குடி மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியம், அதன் தேவைகளைப்பற்றி இருந்தது. போதகர் இப்படிப்பட்ட நரமாமிசம் உண்ணும் பழங்குடி மக்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க இங்கு யார் உண்டு? என அறைகூவலிட்டார். தேவ ஆவியானவர் ஜேம்ஸ் சால்மர் உள்ளத்தில் பேசினபடியால் ஆண்டவரே உமக்குச் சித்தமானால் என்னை அனுப்பும் என தனதுள்ளத்தில் ஜெபித்தார். பின்பு வீடு திரும்பும்போது சாலை அருகே முழங்கால்படியிட்டு ஆண்டவரே என்னை ஏற்றுக்கொள்ளும் ஒரு மிஷனெரியாக என்னை அனுப்பும் என பிரார்த்தனை செய்தார்.

போதகர் மெக்கின் மற்றும் திரு. டன்கன் போன்ற ஆவிக்குரிய தலைவர்கள் ஜேம்ஸ் சால்மரை உற்சாகப்படுத்தி வழிநடத்தினர். நாட்கள் சென்ற பின்பு, ஜேம்ஸ் சால்மர் ஒரு தேவ ஊழியரானார். பட்டணத்தில் நற்செய்திக் கூடுகைகள், வீடுகளில் ஜெபக்கூட்டங்கள் நடத்தி வந்தார். அதே வேளையில் தான் ஒரு மிஷனெரியாகச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் மங்காமல் எரிந்து கொண்டே இருந்தது. 1865–ம் ஆண்டு அக்டோபர் 11–ம் தேதி ஜேன் ஹெர்கல் என்ற பெண்ணை திருமணம் செய்தார். ஜேன் சால்மருக்கு ஏற்றத் துணையாக மிஷனெரிப் பணிக்கு அர்ப்பணித்து, வாஞ்சையுள்ள பெண்ணாக இருந்தார். ஆண்டவரை அறியாத மக்கள் அவரை அறியத் துடிப்பாகக் காத்திருந்த பெண் அவர். திருமணமாகி, இரண்டாம் நாளில் அபிஷேகம் செய்யப்பட்டு, ஜனவரி 4–ஆம் தேதி 1866–ல் "ஜாண் வில்லியம் –II" என்ற கப்பலில் பணிக்களம் செல்லப் புறப்பட்டார்கள்.

1867இ மே மாதம் 20–ம் தேதி பசிபிக் கடலில் உள்ள அவருவா தீவுக்கு வந்தார்கள். அது ரரோ டோல்கா நகர் அருகே இருந்தது. முதலாவதாக நபராக கரையிறங்கிய அவரை, உன் பெயர் என்ன என்று கேட்ட கேள்விக்கு 'சால்மர்' என்று பதில் கொடுத்தார். அதைக்கேட்ட அந்த பழங்குடி மக்களுக்கு அந்த பெயர் உச்சரிக்க முடியாமல் டமாட்டி

என்று அழைத்தனர். ஒருமுறை கூட கேள்வியுராத மக்களைச் சந்திக்கவே நான் வந்தேன் என்றார். கிறிஸ்துவை சரிவர ஏற்றக்கொள்ளாத அம்மக்கள் குடிப்பழக்கத்தில் நிலைத்திருந்தனர். குடியை நிறுத்துவதே அவருடைய முக்கியப் பணியாகியது.

காட்டுக்குள், அடர்ந்த புதருக்குள் இருந்து குடிக்கும் மக்கள் மத்தியில் திடீரெனச் சென்று மதுவைப் பூமியில் ஊற்றச் செய்துவிட்டு, கிறிஸ்துவைப் பிரசங்கிப்பார். சால்மரின் வாஞ்சை நரமாமிசம் உண்ணும் மக்கள் மீது இருந்தபடியால் குடும்பமாக நியு கினியா செல்ல ஆயத்தமானார். 'கிறிஸ்துவிடம் நெருங்கி வரும்போதெல்லாம் ஆண்டவரை அறியாத மக்களின் பணி வாஞ்சையே என்னை ஆட்கொள்கிறத என்கிறார் சால்மர்.

1877–ம் ஆண்டு மே மாதம் நியூகினியா சென்றார். நாகரீகமற்ற, பாவம் நிறைந்த, மூடத்தனம் மிக்க, கொடூரமாக பழங்குடிகள் வாழுமிடமாயிருந்தது. ஒரு நாள் சால்மர் வீட்டிற்கு ஒரு பெருங்கூட்ட பழங்குடியினர் வந்து, எங்களுக்குக் கத்தி, கரண்டி, பாசி போன்ற பொருட்களைக் கொடு, இல்லாவிட்டால் உன்னைக் கொன்ற விடுவோம் என மிரட்டினார்கள. சால்மர் சற்றும் பயப்படாமல் என்னை வேண்டுமானாலும் கொன்று சாப்பிடு, ஆனால் என்னிடமிருந்து ஒரு சிறு பொருளையும் பயமுறுத்தி வாங்க முடியாது என தீர்க்கமாக கூறி விட்டார். மறுநாள் அந்தக்கூட்டத்தைச் சேர்ந்த தலைவன் வந்து அவரிடம் நடந்த சம்பவத்திற்காக மன்னிப்புக் கேட்டான். உடனே அவனுக்கு சில பரிசுப் பொருட்களை கொடுத்தார்.

சால்மரின் மனைவி ஜேன் அவருக்கு இணையாக ஊழியத்தில் மனிதர்களையே சாப்பிடும் கொடூர மக்கள் மத்தியில் அச்சமின்றி பணியாற்றினார்கள். ஒருநாள் இறந்து போன தனது கணவன் உடலையே விருந்தாக சமைத்து ஒருகூட்ட மக்களுக்கு பரிமாறினாள் ஒரு பெண். இப்படிப்பட்ட மக்கள் கிறிஸ்துவை அறிந்து வளர்ந்தனர்

சால்மரின் கடின உழைப்பால் 1878–ல் மனிதர்களை சாப்பிட்ட மக்கள் 1882–ல் மனந்திரும்பி, ஒருவரையொருவர் ஏற்று, ஐக்கியமாக அன்பாக வாழக் கற்றனர். நரமாமிசம் இல்லை, மனித மண்டை ஓடு, தாடை எலும்பு அணிகலன்களாக அணிவதில்லை. சண்டையிட்டு கொன்று தின்னும் இம்மக்கள் கிறிஸ்துவில் புது வாழ்வு பெற்றனர். 1901–ம் ஆண்டு ஏப்ரல் 4–ம் தேதி "கோரிபாரி" என்ற தீவிற்கு பயணமாகி ஏபல்ல 7–ம் தேதி ஈஸ்டர் மாலை அன்று அந்த தீவை அடைந்தார். சால்மர் உடன் ஊழியர் டாம் கின்ஸ் இருவரும் கோரிபாரி தீவில் இறங்கியதும் அவர்களை ஒரு பெரிய விருந்துச் சாலைக்கு அந்த பழங்குடி மக்கள் அழைத்துச் சென்றனர். தீடிரென மிஷனெரிகள் பின்புறம் இருந்து உருட்டுக் கட்டைகளால் தாக்கப்பட்டு, கீழே தள்ளப்பட்டு, தலைகள் துண்டிக்கப்பட்டன. அவர்கள் உடல்களை பெண்கள் சமைத்து அங்கிருந்த பெருங்கூட்ட பழங்குடியினருக்கு விருந்தாகப் படைத்தனர்.

ஜேம்ஸ் சால்மர் ஒருநாளும் பயங்கரமான இந்த பழங்குடியினருக்கு பயப்பட்டதில்லை காரணம் அவருக்கு மரண பயமில்லை. மனிதனையே உண்ணும் இந்த மக்களுக்காக தன்னையே பலியாக்கியமையால், இன்று சாட்சிமிக்க திரள்கூட்ட நரமாமிச பட்சினிகள் தேவனுடைய பிள்ளைகளாக, தலைமுறை தலைமுறைகளாக வாழ்கின்றனர்.

கர்த்தரின் பணியில்
அன்பு சகோதரன்
S.சுகுமாரன்

# 2019 பிப்ரவரி மாதத்திற்கான வேத வினா!

1. ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள் என்றவர் யார்?
2. விசுவாசத்தில் வல்லவன் யார்?
3. அக்கிரமகாரருக்காக மரித்த ஒரு நீதிமான் யார்?
4. கனம் பண்ணுவதில் ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் என்றவர் யார்?
5. "அப்பா பிதாவே" என ரோமரில் எந்த அதிகாரத்தில் எத்தனையாவது வசனத்தில் உள்ளது ?
6. ரோமாபுரியில் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட ஒரு ஸ்திரீ யார்?
7. உலக பிரசித்தமான விசுவாசத்தை பெற்றிருந்த சபை எது?
8. எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருங்கள் என்றவர் யார்?
9. ஜீவ பலியாக ஒப்புகொடுக்க வேண்டுமென்று எங்கு வாசிக்கிறோம்?
10 "தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்பு கொடுத்தார்" என வாசிப்பதெங்கே?
11. தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்பு கொடுத்தார்" என்வாசிப்பதெங்கே?
12. நாம் பிழைத்ததாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம் நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம் என்று வாசிப்பதெங்கே?
13.தீமையை விட்டு விலகி நன்மையை பற்றிகொண்டிருங்கள் என்று வாசிப்பதெங்கே?
14. "சமாதானத்தை கூறி, நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்" என எங்கே வாசிக்கிறோம்?
15. நான் ஜெபம் பண்ணும்போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்றவர் யார்?

விடைகளை வருகின்ற 15-02-2019 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps மூலமும் Seithi Malar ATC குருப்பில் அனுப்பவும் கூ 66015503) விடைகளை வேதாகமத்தில் லேவியராகமத்தில் ( ரோமர் 1,4,5,8,10,12,14,16அதிகாரத்தில் இருந்து பதிலைத் தேடுங்கள் ).

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

## தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;

மத்தேயு 7:7

## 2019 ஜனவரி மாத வேத வினாவுக்கு பதில்

1. யோபு (யோபு 3:26) 2. யோபு (யோபு 30:15)

3. யோபு (யோபு 30:1)

4. பில்தாப் (யோபு 8:3)

5. புத்தியில்லாத மனுஷன் (யோபு 11:12)

6. யோபு (யோபு 7:20)

7. யோபு (யோபு 10:1) 8. யோபு (யோபு 6:2).

9. விபசாரகாரன் (யோபு 24:18) 10. யோபு (யோபு 31:1)

11.யோபு (யோபு 29:4)

12. யோபு (யோபு 16:6) 13. யோபு (யோபு 13:23)

14. பாதாளம் (யோபு 10:21)15. எலிபாஸ் (யோபு 22:9)

## 2018 மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Sis. செலின் டேவிட் ஜெயகுமார்

**தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.**
**ரோமர் 14:17**

ஒரு சமயம் ஒரு வாலிபன் ஊழியத்திற்காக ( அந்நாட்களில் மாணவனாக குருவிடம் பாடம் கற்பது) பயிற்சி பெற ஒரு தேவ மனிதனிடம போனான், அவன் வழியிலே ஒரு யோகாசன பயிற்ச்சியாளரை சந்தித்தான் அவர் அவனை எங்கே போகிறாய் என்று விசாரித்தார், வாலிபன் நான் இப்படியாக ஒரு தேவ மனிதனிடம் ஊழிய பயிற்சிக்காக போகிறேன் என்று சொல்கிறான் அந்த யோகி என்னை பார் நான் தண்ணீரின் மேல் நடப்பேன் தண்ணீருக்குள் மூச்சைபிடித்துபல மணிநேரம் இருப்பேன். கம்பளம் விரித்து அதன் மேல் அமர்ந்து வானத்தில் பறப்பேன், நீ சொன்ன அந்த தேவ மனிதனால் இவைகளை செய்ய முடியுமா? என்றார். அதற்கு வாலிபன் பறவை கூட வானத்தில் பறக்கின்றன. வாத்துகள் தண்ணீர்மேலே நீந்துகின்றன, மீன்கள் தண்ணீருக்குள்ளேயே வாழ்கின்றன, இவைகள் எவ்லாம் 5 அறிவு படைத்த ஜீவிகள் செய்கின்ற செயல்கள்! இதை செய்வது பெரிய காரியம் அல்ல, நான் குருவாக ஏற்று கொண்டவர் பெருமை பேசவில்லை, மற்றவர்கள் மேல் பொறாமை கொள்வதில்லை. மற்றவர்களை குறைசொல்லுவதுமில்லை, அடக்கமும் அன்பும், தெய்வீக குணங்கள் கொண்ட மாமனிதர், ஆகையால்தான் நான் அவரிடம் கற்றுகொள்ள போகிறேன் என்றானாம். யோகி வாய் பேச முடியாமல் மௌனமாகிவிட்டார்.

ஆம் இன்று பிசாசுகளை துரத்துவது, தீர்க்கதரினம் சொல்லுவது, மற்றும் அற்புதங்கள் செய்வது, என்று பல்வேறு வரமுள்ளவர்களாய் தங்களை பிரஸ்தாபித்துக்கொள்ள விரும்பும் அநேகர், நற்குணசாலிகாளாய் இருக்க வேண்டும் என்பதை பெரிதாக நினைப்பதில்லை. அதற்கு மதிப்பும் கொடுப்பதில்லை. விளம்பரத்திற்கு முதலிடம் கொடுத்து தங்களை காட்டிகொள்ள விரும்புகிறார்கள், திவ்ய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாவதை மூன்றாம் தரமாகவே கருதுகிறார்கள், கர்த்தர் வரும் நாளில் எது நிற்கும் எது நம்மை மறுரூபபடுத்தும் என்பதை அறிந்தார்களில்லை!

அவர்களை மரங்களிலிருந்து இறக்க யோசுவா கட்டளையிட்டான். அவர்கள் ஒளிந்து கொண்டிருந்த கெபியிலே அவர்களை போட்டு, இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி பெரிய கற்களை கெபியின் வாயிலே அடைத்தார்கள்( யோசுவா 10:27

ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு வாக்குதத்தம் பண்ணபட்ட தேசத்திற்குள் வந்த இஸ்ரவேல் சந்ததியார் கட்டாத வீடுகளையும், நட்டாத தோட்ட துரவுகளையும் அனுபவிக்க வேண்டுமானால், கானானில் ஏற்கனவே குடியிருந்தவர்களை துரத்தியபின்பே தேசத்தை சுதந்தரிக்க முடியும். முற்பிதாகளுக்கு தேசம் வாக்குபண்ணபட்டு இருந்தாலும்அதை சுதந்தரிக்க தடையாய் இருக்கும் ஜாதிகளின ராஜாக்களை விரட்யடிக்கதான் வேண்டும் அப்படியே யோசுவா செய்தார்.

ஆகவே பிரியமானவர்களே நாம் நம் 5 புலன்களை அடக்குவோம், அதிகாரமுள்ள இராஜாக்களை போல ஜீவிப்போம், எதிராளிகளை ஜெயிப்போம். தமது இரத்தத்தினாலே நம்மை கழுவி நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கிய தேவனுக்கு முன்பாக (வெளி 1:6) வெற்றி வாழ்வு வாழ்ந்து காட்டுவோம்.ஆவிக்குறிய ஆளுகை செய்வோம்! ஆயிரவருட அரசாட்சி எழுத்தின்படியே நமக்கு ஆயத்தமாகிகொண்டிருக்கிறது.

ஆமென்!

 அல்லேலூயா!!!

## மகனே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது.( மாற்கு 5:34)

கிறிஸ்துவக்குள் பிரியமானவர்களே!

இன்று உலகளவில் சமுதாயத்தில் பெண்களுக்கு அநேக அநீதிகள் இழைக்கப்படுகிறது, பெண்கள் பெரும் பாடுகளுக்கு உட்படுத்தபடுகிறார்கள் குடும்பத்தை நடத்துவதில் பெண்கள் பெரும் பங்கு வகிக்கிறார்கள், குடும்ப பாரம் ஒரு பக்கம், அதை விட சமுதாயத்தில் அவர்கள் படும் பாடுகள் ஒரு பக்கம்.

வேதத்தில் இப்படிபட்ட ஒரு பெண்மணியை குறித்து பார்க்கிறோம், வேதத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பெயர் "பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ" அவர்களுடைய உண்மையான பெயர் கொடுக்கபடவில்லை, காரணம் இப்பொழுது பெரும்பாடுள்ள பலருக்கு அவர்கள் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருந்தது.

அந்த ஸ்திரியின் நிலமையை சற்று யோசித்து பாருங்கள், சரீரத்தில் அவர்களுக்கு பொரும்பாடு இருந்தது, ஒரு நாள் இரண்டு நாள் அல்ல பனிரெண்டு வருடங்கள், அநேக மருத்துவர்கள் பார்த்தும் பலனேதும் இல்லை(மாற்கு 5:26) சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது(1 தீமத் 4:8) ஒருவராரும் அவர்களை ஸ்தொஸ்த்தபடுத்த முடியவில்லை(லூக்கா 8:43) வைத்தியர்கள் எல்லாம் கைவிரித்துவிட்டார்கள், இந்த நோயை தீர்க்க நம்மால் ஒன்றும் செய்ய இயலாது என்று கைவிடபட்ட ஒரு சூழ்நிலை, மருத்துவர்களுக்கு செவழித்து அவர்களுடைய சொத்து எல்லாம் கரைந்து போனது, அவர்களிடத்தில் இருப்பு ஏதும் இல்லை, கை நீட்டி மற்றவர்களிடத்தில் உதவி கேட்கும் நிலைமைக்கு தள்ளப்பட்ட சூழ்நிலை.இனி ஒன்றும் இல்லை எல்லாம் முடிந்து விட்டது என்ற நிலைக்கு லந்துவிட்டார்கள்.

### எதை குறித்து பேசுகிறாய்.:

இந்த சூழ்நிலையில்தான் அந்த பெண்மணி இயேசுவை குறித்து கேள்விவபடுகிறார்கள். (மாற்கு 5:27) யாரோ ஒருவர் அவர்களிடத்தில் இயேசுவை குறித்து சொல்லி இருக்கிறார்கள். இன்றும் அநேக சகோதரிகள் உலகத்தால் ஆன பெரும் பாடுகளோடு சிக்கிதவிக்கிறார்கள், "இப்படிபட்ட சகோதரிகளுக்கு இயேசுவை அறிமுக படுத்துவது நம்மேல் விழுந்த கடமை" இதை எக்காலத்திலும் நாம் மறந்துவிடகூடாது, எதை எதையோ மணிக்கணக்காக பேசும் நாம், இயேசுவை குறித்து பேசுவதில் நாம் நேரத்தை செலவிடுகிறோமா?

### விசுவாசத்தோடு வாசி.:

இயேசுவை குறித்து கேள்விபட்டவுடன், அந்த பாடுள்ள ஸ்திரீ இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித்தார்கள், "தேவனால் எல்லாம் கூடும்" இயேசு பரம வைத்தியர் என்று விசுவாசித்தார்கள், இருள் நிறைந்த அவர்களுடைய இருதயத்தில் விசுவாசம் என்ற வெளிச்சம் பிரகாசித்தது, " நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய்" என்ற வாக்குதத்தத்தை அவர்கள் சொந்தம் கொண்டாட ஆரம்பித்தார்கள், வேத வசனங்களை நா் விசுவாசத்தோடு வாசிக்கும் போது நம் இருதயம் கொழுந்துவிட்டு எரியும், நம் வாழ்க்கையில் காணப்படும் இருள் அகலும்.வெளிச்சம் பிரகாசிக்கும்,

## தடைகளை தாண்டும் விசுவாச நடை,:

கிரியை இல்லாத விசுவாசம் செத்தது, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி விட்டு கையை கட்டிகொண்டிருந்தால் ஒரு பிரயோஜமும் இல்லை, பெரும் பாடுள்ள அந்த ஸ்திரி தீர்மானம் பண்ணினார்கள், " இயேசுவின் வஸ்திரத்தை தொடுவேன்" என்று தாமதம் செய்யவில்லை " விசுவாசித்தார்கள்" அந்த ஸ்திரி ஒரு தீர்மாணம்எடுத்தார்கள்,! எழுந்து நடக்க ஆரம்பித்தார்கள், உலகப்பிரகாரமாண மருத்துவர்களை நோக்கியல்ல, பரம வைத்தியர் இயேசுவை நோக்கி நடக்க ஆரம்பிக்கிறார்கள், கையில் பணமில்லை, உடலில் பெலவீணம்,இயேசுவை சுற்றிலும் ஜன கூட்டம், இவைகள் ஏதும் அவர்களை தடைசெய்ய முடியவில்லை, விசுவாசத்தோடு நடை போட்டு முன்னேறுகிறார்கள் இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தை தொட்ட மாத்திரதத்தில் அற்புத சுகம் பெறுகிறார்கள்.

## நெருக்கம் அல்ல விசுவாசஉறவு:—

அநேகர் இயேசுவை நெருங்கினார்கள், இயேசுவிடமிருந்து வல்லமை புறப்படவில்லை, பெரும்பாடுள்ள அந்த ஸ்திரி இயேசுவை நெருங்கவில்லை, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொடுகிறார்கள் இயேசுவிடமிருந்து வல்லமை புறப்படுகிறது உடனே சுகம் பொறுகிறார்கள், ஒரு எதிர்பார்ப்போடு, அதே சமயத்தில் விசுவாசத்தோடு இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தை தொடுகிறார்கள் உடனே இயேசுவிடமிருந்து மகிமை வெளிபட்டது, நம்முடைய கரங்களை விசுவாசத்தோடு ஒவ்வொருநாளும்,தேவனை நோக்கி நீட்டுவோம் அப்பொழுது அவருடைய வல்லமையால் நிறப்பபடுவோம்! "விசுவாசமே நமது பெலன்"

## சாட்சியும் சமாதானமும்:—

கடைசியாக அந்த ஸ்திரி நடுங்கி வந்து, இயேசுவின் முன்பாக விழுந்து, தான் அவரை தொட்ட காரணத்தையும் உடனே தாம் சொஸ்தமானதையும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக இயேசுவுக்கு அறிவித்தால், பிரியமானவர்களே நாமும் கூட தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்த நன்மைகனை சாட்சியாக அறிவிக்க கட்மைபட்டு இருக்கிறோம், அந்தசாட்சி பலருக்கு வீசவாசத்தை கொடுக்கும், இயேசுவை நோக்கி பார்க்க அவரண்டை செல்ல அவருடைய வார்த்தைகளை ஆவலுடன் கேட்க அவர்களை ஓட வைக்கும்,சாட்சி பகரும்போது தேவன் நமக்கு சமாதானத்தையும் ஆசீர்வாதத்தையும் கட்டளையிடுகிறார்

மகனே திடன் கொள் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடு போ!என்று தேவன் நம் ஒவ்வொருவரையும் தேற்றுகிறார்.

இப்புதிய ஆண்டின் நாம் தேவன் மீது உள்ள விசுவாசத்தில் வளருவோம்! தேவ வல்லமையினாலும், தேவ சமாதானத்தினாலும், நிரப்பபடுவோம்,தேவன்தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

**லதா கிறிஸ்டோபர்**

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு











## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only